செ.வெ.எண்:12/செப்டம்பர் நாள்: 10.09.2020

**தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கைரேகை பதிவு (Bio-metric finger print Reader) செய்யும் வசதியுடன் கூடிய 1048 புதிய விற்பனை முனைய இயந்திரங்களை நியாய விலைக்கடை விற்பனையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தருமபுரி மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் தற்போது பயன்பாட்டில் உள்ள (E-POS) விற்பனை முனைய இயந்திரத்தினை மாற்றி (Bio-metric finger print Reader) கைரேகை பதிவு செய்யும் வசதியுடன் கூடிய 1048 புதிய விற்பனை முனைய இயந்திரங்களை நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களின் கைரேகை பதிவு செய்த பின்னர் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். குடும்ப அட்டையில் உள்ள ஏதாவது ஒரு நபர் கைரேகையை பதிவு செய்தால் போதுமானது. இதன் மூலம் நியாயவிலைக்கடைகளில் முறைகேடுகள் முற்றிலுமாக களையப்படும்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.ராமதாஸ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.ஆ.தணிகாசலம், கூட்டுறவு சங்க சார் பதிவாளர் திரு.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தருமபுரி.**